01-11-14 Dinakaran

### கோயம்பேடு, வடபழனி, அசோக்நகர் உள்பட

# 34 மெட்ரோ ரயில் நிலையங்களில் ஏடிஎம் மையம் திறக்க நடவடிக்கை



சென்னை, நவ. 1: சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க, வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரையும், சென்ட்ரலில் இருந்து புனித தோமையார் மலை வரையும் இரண்டு வழித்தடங்களில் 45 கி.மீ.க்கு மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. முதல்கட்டமாக, கோயம்பேட்டில் இருந்து அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர் வழியாக ஆலந்தூர் வரை 10 கி.மீ. தூரத்துக்கு 2015 மார்ச் மாதத்திற்குள் மெட்ரோ ரயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதையொட்டி, இந்த வழித்தடங்களில் ரயில் தண்டவாள பாதை, சிக்னல் அமைக்கும் பணிகள் முடிந்து தற்போது சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது. ரயில்நிலைய கட்டுமான பணிகளும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இந்த மாதம் அல்லது டிசம்பரில் பெங்களூரில் இருந்து ரயில்வே பாதுகாப்பு ஆணையர் சென்னை வந்து மெட்ரோ ரயில் பாதையை ஆய்வு செய்து, பயணிகள் ரயிலை இயக்குவதற்கான அனுமதியை வழங்குவார்.

இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையங்களில் காலி பணியிடங்களில் தனியார் கடைகள் மற்றும் ஏடிஎம் மையங்கள் அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தனியார் கடைகள் வைக்க அனுமதி வழங்குவதற்கான டெண்டர் விடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறும்போது, "பயணிகள் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு வரும்போது, அவர்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய, சிறிய அளவிலான ஷாப்பிங் மால்கள் மெட்ரோ ரயில் நிலையங்களில் அமைக்க அனுமதி தரப்படும். இதற்காக முதல்கட்டமாக, கோயம்பேடு, வடபழனி, அசோக்நகர் ஆகிய ரயில் நிலையங்களில் காலியாக உள்ள சுமார் 3 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் வர்த்தக நிறுவனங்கள் தங்கள் கடைகளை வைக்க விரைவில் டெண்டர் விடப்பட உள்ளது. இவர்களுக்கு அதிகபட்சமாக 15 ஆண்டு வரை கடைகள் வைக்க ஒப்பந்தம் செய்யப்படும்.

இதேபோன்று, கோயம்பேடு, வடபழனி, அசோக்நகர், சென்ட்ரல், எழும்பூர், என மொத்தம் 34 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் ஏடிஎம் அமைப்பது குறித்தும் வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. ஓரளவு கூட்டம் அதிகம் வரக்கூடிய ரயில் நிலையங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஏடிஎம் மையம் அமைக்கப்படும் என்றார்.